R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
January 2019



குமுளியில் 8வது வேர்ல்டு இவான்சலிசம் ரிட்ரீட்

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU
INDIA

**Our TV Program:**

Tamilan TV Every Thursday 6.00 P.M

& Nambikkai TV Every Saturday 8.00 P.M

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 | ஜனவரி 2019 | கனி 2

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:00 - 5:15 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.




**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.



**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 221

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அவர்கள் வானபரியந்தம் ஏறினாலும், அவ்விடத்திலிருந்து அவர்களை என்ன செய்யபப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்?
2. ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமா?
3. பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன் என்ற தீர்க்கன் யார்?
4. கண்காணிப்பை விரும்புகிறவன் எப்படிப்பட்ட வேலையை விரும்புகிறான்?
5. மகன் தகப்பனைக் கனவீனப்படுத்துகிறான்; மகள் தன் தாய்க்கு விரோதமாகவும், மருமகள் தன் மாமிக்கு விரோதமாகவும் என்ன செய்கிறார்கள்?
6. இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. எப்பட்டணம் தன் வார்த்தகரை வானத்து நட்சத்திரங்களிலும அதிகமாக்கினது?
8. தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய எப்படி இருக்கவேண்டும்?
9. அவன் எதற்கு பலியிட்டு, எதற்குத் தூபங்காட்டுகிறான்?
10. தனது முதிர்வயதில் இயேசுகிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டவனாக இருந்து கொண்டு அன்பினிமித்தம் மன்றாடி பவுல் யாருக்கு எழுதினார் ?

## வேதாகம ஆய்வு... 6

அதோனியா




Adonijah

1. கர்த்தர் தான் ஜெமான் – கி.மு 1050
2. தாவீதுடைய நான்காவது மகன் – 2சாமு.3:4
3. இவனுடைய மூத்த சகோதரன் அம்மோன்.
4. அபிஷாகை விவாசகம்பண்ணகேட்டு சாலொமோனால் கொல்லப்பட்டான் – 1இரா.2:17,25
5. தாவீதின் முதிர் வயதானகாலத்தில் தான் ராஜாவாகும்படி முயற்சித்தான்.

சிறுவர் பகுதி

# தேறின வேதபாரகன்

**வேத பகுதி:எஸ்றா 7:1–10**



இஸ்ரவேலிலே தேறின வேதபாரகனாக எஸ்றா இருந்தான். இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் கிறிஸ்தவ ஊழியரின் மகன் மிகப் பெரிய வேலைகளில் இருக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ அப்படியில்லை தன் தகப்பனுடைய வழியிலேயே அவன் ஒரு சிறந்த வேதபாரகனாக இருக்கிறான். தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இப்படி அவன் இருந்தபடியால் கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. அதுமட்டுமா?

அர்த்தசஸ்டா என்ற ராஜா அவன் கேட்டதை எல்லாம் கொடுத்தார். எப்படி அவன் கேட்டதை எல்லாம் கொடுத்திருப்பான். அந்த அளவுக்கு எஸ்றா, ராஜாவின் பார்வையில் மிக நல்லவனாகவும், கர்த்தருக்குப் பயப்படுகிறவனாகவும் இருந்தபடியால் தேவன் ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்திருக்கிறார். நாம் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யும்போது சகல ஜனங்களிலும் நமக்கு கிருபை கிடைக்கும்படி செய்வார். காரியங்களையும் கைகூடிவரச் செய்வார். இவையெல்லாம் நன்கு அறிந்த எஸ்றா சகலத்தையும் பெற்று அனுபவித்தான். நீங்களும் இந்த எஸ்றாவைப்போல வேதாகமத்திலும் ஆண்டவருடைய வேதவசனங்களை மனப்பாடம் செய்வதிலும் அவைகளை கைக்கொள்வதிலும், தேர்ச்சி அடைவீர்களா? அப்படி தேர்ச்சி அடைவீர்கள் என்றால் கர்த்தர் எஸ்றாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார்.

மேலும், எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும், உபதேசிக்கவும், தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான். கர்த்தருடைய வேதத்தை கேட்கிற நாம் அதை குறித்து அசட்டையாக இருக்கலாமா? அநேகர் பாருங்கள் பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அடுத்தவனை கூப்பிடுவது, அடுத்தவனை கில்லி வைப்பது, மேலே எதையாவது பார்த்துக்கொண்டு இருப்பது. இப்படியெல்லாம் செய்யலாமா? கூடாதே! பெரேயா பட்டணத்தார்களைப்போல ஆராயவும், அதன்படி செய்யவும் முயற்சிக்கவேண்டும். புதையல்களை தேடுகிறதுபோல தேடினால் தானே ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கமுடியும். அப்படிச் செய்வீர்களா? எஸ்றாவைப் போல வளருங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார். இந்த ஆண்டில் இப்படி செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:**

“கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி, நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்” (எஸ்றா 7:10)



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 ஜனவரி -2019 கனி - 2

ஆசிரியருரை

## சத்தியம் – Truth

**சத்தியம்** சத்தியம் என்று எங்கும் எப்பொழுதும் பேசப்படுகிறது. எது சத்தியம், யார் சத்தியபரர் அந்த சத்தியத்தின் பயன் என்ன என்ற காரியங்களைக்குறித்து இன்றைய நாளிலே தியானிப்போம். இயேசு சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்றார் (யோவா.17:17). இந்த சத்தியபரர் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணினார். ஆனால் அப்பொழுது இருந்த ஜனங்களோ அவரை அறிந்துகொள்ளவில்லை; இதைக்குறித்து யோவான் சொல்லும்போது; "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14).




தேவன் மனிதனாக பிறந்தால்தான் மனிதனுடைய கஷ்டங்கள் தெரியும் என்று ஒரு சிலர் சொல்லக்கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்தப்படியாக இயேசு மாம்சத்திலே வந்து மனிதர்களுக்குள்ளே வாசம்பண்ணினார். அவருக்கும் பல பாடுகள் இருந்தது, அவருக்கும் பசி உண்டாயிற்று, அவரையும் பிசாசு சோதித்தான். முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியிலே தேவனுடைய சித்தம் செய்கிறவராயிருந்தார். அவருக்குப்பின் வந்த ஆவியானவரும் சத்தியமுள்ளவராயிருக்கிறார்; "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்றார் (யோவா.16:13,14). குமாரன் எப்படி சத்தியபரராயிருக்கிறாரோ அதைப்போல ஆவியானவரும் சத்தியமுள்ளவராயிருக்கிறார். அந்தப்படியே பிதாவானவரும் இருக்கிறார். "அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்" (யோவா.3:33). இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். சத்தியபரராயிருக்கிறார்கள். இதைத்தவிர உலகத்திலே சத்தியம் சத்தியம் என்று பேசப்பட்டாலும் போற்றப்பட்டாலும் அது சத்தியமாக இருக்காது.

**சத்தியம் நம்மை நேசிக்கும்:** "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வாசிக்கிறோம் (யோவா.3:16). தேவன் சகலத்தையும் உண்டாக்கினவர். அவர் பாவத்தில் வீழ்ந்துபோன மனிதனை மீட்டு எடுக்கும்படியாக தம்முடைய குமாரனையே இந்த உலகத்திற்கு கொடுத்து அன்புகூர்ந்தார். அன்பு அன்பு என்று எல்லோரும் பேசுவார்கள். ஏன், அன்பைப் பற்றி பேச ஆரம்பித்தால் அடைமழையாக இருந்தாலும் விடாது பேசுவார்கள்! ஆனால் தன்னுடைய குமாரனையே மற்றவர்களுக்கு அடிமையாக வேலைசெய்யும்படி கொடுப்பார்களா? அது எப்படி முடியும் என்பார்கள். ஆனால் தேவன் தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் அவரை சிலுவையில் மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார். இது அகாப்பே அன்பல்லவா! "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவா.4:10). அன்பிற்கு அடையாளமாகவும், தம்முடைய நேசத்திற்கு அடையாளமாகவும் இயேசுவை தேவன் ஒப்புக்கொடுத்தார். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்" என்றெல்லாம் 1கொரிந்தியர் 13-ம் அதிகாரம் 4-6 வசனங்களில் படிக்கிறோம். இந்த அன்பின் குணங்கள் நிறைந்த தேவன் சத்தியபரர். அவர் நம்மை நேசிக்கிறார். நீ அவரை அறிந்துகொள்ளவேண்டும். சத்தியம் உன்னை நேசிக்கும்போது அந்த சத்தியத்தை நீ விசுவாசித்துப் பற்றிக்கொள்ளவேண்டுமல்லவா? லாசரு என்ற மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவன் மரித்துபோன செய்தியை அறிந்த ஆண்டவர் இயேசு நான்கு நாட்களுக்குப்பின்பு சென்றார். அப்பொழுது அங்கிருந்த யூதர்கள்: "இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்" (யோவா.11:36). ஆம், லாசருவை அவர் நேசித்தார். அதைப்போல உங்களையும் நேசிக்கிறார். லாசருவை உயிரோடு எழும்பின ஆண்டவர் உங்களையும் எழுப்புவார். அவர் வல்லமையுள்ள தேவன், சத்தியபரர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

**சத்தியம் நம்மை போஷிக்கும்:** இதை நீங்கள் நம்புகிறீர்களா? "தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்" (எபே.5:29). யாராவது தன் மாம்சத்தை போஷித்துக் காப்பாற்றாமல் இருப்பார்களா? ஒருவரும் இருக்கமாட்டார்கள். பசி வந்தால் போதும் அங்குமிங்கும் சென்று தன் பசியைபோக்கும்படியாக முயற்சிப்பார்கள். தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபையை கர்த்தர் போஷிக்க அறிந்திருக்கிறார். அந்த மந்தை அவருடையது. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தைக்கொண்டு அதை சம்பாதித்துள்ளார். அந்த சபையை கர்த்தர் போஷிக்கிறார் என அறிகிறோம். ஒரு முறை இயேசுவை பின்பற்றின திரளான ஜனங்களைப் பார்த்து கர்த்தர் பரிதபித்தார். "இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால்



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**4. ஞானஸ்நானம் ஏன் அவசியமானது?**

**தற்சோதனை பகுதி - 4**

1. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது ☐ வசன ஆதாரம் -
2. ஞானஸ்நானம் ஒரு பாரம்பரிய சடங்கு ☐ வசன ஆதாரம்-
3. நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்க ☐ வசன ஆதாரம்-
4. பாவி மனந்திரும்ப வழி இல்லை ☐ வசன ஆதாரம்-
5. விசுவாசத்தினாலே அவரோடேகூட எழ ☐ வசன ஆதாரம்-
6. விசுவாசம் போதும் ஞானஸ்நானம் தேவையில்லை ☐ வசன ஆதாரம்-
7. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ☐ வசன ஆதாரம்-
8. மறுபிறப்பிற்கு ஞானஸ்நானம் அவசியமல்ல ☐ வசன ஆதாரம்-
9. ஞானஸ்நானத்தின் மூலம் அவரைத் தரித்துக்கொள்ள ☐ வசன ஆதாரம்-
10. கிறிஸ்துவை தரிக்க ஞானஸ்நானத்தில் வழியில்லை ☐ வசன ஆதாரம்-

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

## வேத அறிவுப்போட்டி எண் 218 ல் வெற்றிபெற்றவர்கள்

38.Mrs.பிரமிளாரேவதி - கோவை
39.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
40.Mrs.ஞானம்பிலிப் - கோவை
41.Mrs.ஞானதீபம் - கோவை
42.Mrs.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
43.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
44.Mrs.ராஜம்மாள் - சென்னை
45.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
46.Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
47.Mrs.கமலவேணி - சென்னை
48.S.லதா - தேனி
49.Mrs.சாந்தாபழநி - தருமபுரி
50.Mrs.இளவரசிஜோபிதா - கோவை
51.Mrs.ஜோதிபிச்சைமுத்து - திருச்சி
52.Mrs.ஜெமிநல்லையா - கோவை
53.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
54.G.பூங்கோதை - கோபி
55.Mrs.சுசிலாராஜசிங் - வள்ளியூர்
56.A.அருள்செல்வராஜ் - திருநெல்வேலி
57.Mrs.இந்திராஜெபகனி - நாசரேத்
58.R.சத்தியநாதன் - நாசரேத்
59.Mrs.பாலின்டேனியேல் - சென்னை
60.Mrs.எபிநேசர் எட்வேர்டு - கடலூர்
61.S.ஜாய் சந்தரகாந்தா - நல்லூர்
62.Mrs.சொர்ணமணி - தூத்துக்குடி
63.Mrs.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
64.J.ஜாய்கமலம் - நாசரேத்
65.Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
66.K.M.சாந்தி - வாடிப்பட்டி

## வேத அறிவுப்போட்டி எண் 219 ல் வெற்றிபெற்றவர்கள்

38.M.இராமச்சந்திரன் - தூத்துக்குடி
39.K.ரத்தினாபாய்பிரசாத் - மதுரை
40.Mrs.நவரத்தினம்ஞானராஜ்- நாசரேத்
41.Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
42.T.ஏஞ்சலின்நேசமலர்- கன்னியாகுமரி
43.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
44.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
45.Sis.ராஜம்மாள்மனோகரன்- சென்னை
46.Mrs.ரூபவல்யா - நாசரேத்
47.N.ஜெபத்தாய் - நாசரேத்
48.Mrs.எபிநேசர்எட்வோர்டு - கடலூர்
49.Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
50.Mrs.பிராங்கலினாஜான் - ஊட்டி
51.G.பூங்கோதை - கோபி
52.A.அருள்ராஜ் - திருச்சி
53.Mrs.ருக்மணிஜெயசீலி - தேனி
54.Mrs.பாலின்டேனியேல் - சென்னை
55.S.சாந்தகுமாரி - நாசரேத்
56.S.A.சாமுவேல் - பரமத்தி
57.S.R.பெரியசாமி - சேலூர்
58.Mrs.கமலவேணி - சென்னை
59.Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
60.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
61.Mrs.மேரிநிர்மாலா - மதுரை
62.J.மேரிஜெயக்குமார் - மதுரை
63.J.விக்டர்சுவிசேஷமுத்து - தூத்துக்குடி
64.Mrs.ஜாய்கமலம் - நாசரேத்

## அறிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*



▶ நாம் எந்த அளவுக்கு அதிகமாக மூளையைப் பயன்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு நமது மூளை வலுவுடனிருக்கும்.

▶ ஆக்டோபஸின் உடலில் எலும்புக்கூடு இல்லை. அதன் உடல் முழுவதும் தசைகளால் ஆனது. 150 பவுண்டுகள் எடையுள்ள பெரிய ஆக்டோபஸ் தன் உடலைச் சுருக்கிக் கொண்டு சிறிய துவாரத்துக்குள் சென்றுவிடும்.

▶ விண்வெளி வீரர்கள் அணியும் உடையின் எடை 127 கிலோ. அந்த உடை 13 அடுக்குகளாலானது.

▶ ஒரு ராக்கெட் கிளம்பும்போது பயன்படுத்தும் சக்தி 13,000 புகைவண்டி இஞ்சின்கள் பயன்படுத்தும் சக்திக்குச் சமமானது.



வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்" (மாற்.8:2,3). தம்மைப்பின்பற்றி வந்த மக்கள் மீது அவர் கொண்ட கரிசனையைப் பார்த்தீர்களா? அவர் சத்தியபரராயிருக்கிறபடியால் அவர்களை நேசிக்கவும் போஷிக்கவும் அறிந்திருந்தார். சத்தியபரரின் சத்தியத்தை மூன்றுநாட்களாக கேட்டுக்கொண்டே இருந்த மக்களுக்கு பசியைப்பற்றியே தெரியவில்லை. தேவனுடைய வசனமே அவர்களுக்கு போஜனமாக இருந்தது. அவர்களை அனுப்பும்போது அவர்கள் வழியில் சோர்ந்துபோவார்களே என்று அறிந்து அவர்களுக்கு போஜனங்கொடுத்தார். அவர்கள் திருப்தியாக சாப்பிட்டார்கள். மீதமானதை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள். அந்த அளவுக்கு போஜனம் மீந்திருந்தது. அப்படியென்றால் அவர்கள் எந்த அளவு சாப்பிட்டு இருப்பார்கள் என்று பாருங்கள். அவர்களால் எந்த அளவு சாப்பிடமுடியுமோ அந்த அளவு சாப்பிட்டு இருப்பார்கள். அது அவர்களுக்கு திருப்தியான ஆகாரமாயிருந்தது. சதா உணவை நோக்கிக் கொண்டிருப்பவர்கள் கவனிக்கவேண்டும். "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிற வசனத்தை, பிசாசானவனுக்கு ஆண்டவர் எடுத்துரைத்தார் (மத்.4:4). இதைக்குறித்து நாம் உபாகம புத்தகத்தில் படிக்கிறோம்; "அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்" (உபா.8:3).

அன்பு நேயரே, **இந்த சத்தியம் உன்னை விடுதலையாக்கும்:** இயேசு சொல்கிறார்; "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:32). சத்தியத்தை அறியாமல் ஒருவன் விடுதலை அடையமுடியாது. பாவத்திலிருந்து விடுதலையடையும்படி விரும்புகிறார்கள். ஆனால் சத்தியபரராகிய இயேசுவிடம் வரப்பயப்படுகிறார்கள். சமுதாயத்தை பார்க்கிறார்கள், உறவினர்களைப் பார்க்கிறார்கள், நாட்டைப்பார்க்கிறார்கள். உண்மையை அறிய இவைகளைப் பார்த்தால் உண்மை நமக்கு உதவுவது எப்படி? "ஆகையால் குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவா.8:36). அவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுறிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார். அவர் ஒருவரே பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கமுடியும். உங்களுடைய பணத்தையும் நேரத்தையும் விரையம் பண்ணாமல் இயேசுவை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்படுங்கள். வீணானவைகளை நாடி வீணாய்ப்போய்விடாதிருங்கள். அங்குமிங்கும் அலைந்து திரிவதை விட்டுவிட்டு சத்தியத்தை தேடுங்கள். "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டு பிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்" என்றார் (எரே.5:1). சத்தியபரர் சத்தியத்தை தேடுகிறவன் உண்டோ என்று கண்ணோக்க மாயிருக்கிறார். இஸ்ரவேலரோ பலர் சத்தியத்தை தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் நாடிப்போனார்கள். ஆகையால் தேவன் அவர்களை விட்டு சிலவேளைகளில் விலகினார் என்று காண்கிறோம். இன்றைக்கு நமக்கு மன்னிப்பு வேண்டுமானால் நாம் சத்தியத்தை தேடவேண்டும். அந்த சத்தியத்திற்கு செவி கொடுக்கவேண்டும். அதன்படி நடக்க நம்மை

ஆயத்தப்படுத்தவேண்டும். சிலுவையில் தொங்கிய கள்ளன் கடைசிவேளையில் இரட்சிக்கப்பட்டான். அவன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்தான், இயேசுவை நோக்கி மன்றாடினான், சத்தியத்தை நேசித்தான். மற்றகள்ளனுக்கு போதித்தான். இத்தனை காரியங்களையும் செய்த அந்தக் கள்ளனை நோக்கி "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்.23:43).

நாம் செய்யவேண்டியது என்ன? இந்த சத்தியத்தை வாங்கு, வேதாகமம் அதையே நமக்குப் போதிக்கிறது. "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு" (நீதி.23:23). நம்மில் எத்தனைபேர் இந்த சத்தியத்தை விலைகொடுத்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். அநேகர் இலவசமாகவே சத்தியத்தை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆகையினாலோ என்னவோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதிருக்கிறார்கள். சத்தியம் விலையேறப்பெற்றது அதை நாம் வாங்கவே முற்படவேண்டும். அந்த சத்தியத்தை விற்பனை செய்யவோ அல்லது அதை வியாபார ஸ்தலமாகவோ மாற்றிவிடக்கூடாது. ஆண்டவர் ஒரு உவமையில் சொல்லும்போது; "பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்" என்றார் (மத்.13:45,46). இந்த வியாபாரியைப்போல சத்தியத்தைக் கண்டுகொண்ட நீங்கள் அதை வாங்கவும் தனதாக்கிக் கொள்ளவும் முயற்சிக்கிறீர்களா? அதை முதலாவது செய்யுங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்க வசத்தைத் தரித்தவர்களாயும்" என்று எழுதுகிறார் (எபே.6:14). பிசாசின் தந்திரங்களோடு எதிர்க்க நாம் சத்தியத்தை நம்மில் வார்க்கச்சையைப்போல கட்டிக் கொள்ளவேண்டும். சத்தியம் உன்னை நேசிக்கும், உன்னைப் போஷிக்கும், உன்னை விடுதலையாக்கும். இவைகளைப் பெற்றுக்கொள்ள இன்றே சத்தியத்தை தேடு அதைப் பற்றிக்கொள்.

**சத்தியத்தை பற்றிக்கொள்ளுகிறவர்கள் எங்கேயிருப்பார்கள்?**

தேவனோடு இருப்பார்கள். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" என்றார் (வெளி.21:4-7). பரலோகத்தில் நித்திய நித்தியமாக வாழுவார்கள். இந்த பாக்கியத்தை பெற்றுக்கொள்ள காலம் கடத்தாது சத்தியத்தைத் தேடுங்கள். உலகத்தில் எதை எதையோ வாங்கவும், தேவையற்ற காரியங்களுக்குச் செலவு செய்து பின்பு வருத்தப்படுகிறோம். நீங்கள் முதலாவது சத்தியம் அடங்கிய ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கி அதைப் படிக்க ஆரம்பியுங்கள். அதில் உங்களுக்கு எழும்பும் சந்தேகத்தை குறித்துவைத்துக் கொண்டு உங்கள் போதகரிடம் விளக்கம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்.



**வேத அறிவுப்போட்டி எண் 218 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1.எலியா, எலிசா | - 2இரா.2:8 |
| 2. தேவதூதன் | - வெளி.22:9 |
| 3. இல்லை | - 1நாளா.17:6 |
| 4. யோவான் | - மத்.11:13 |
| 5. அத்தலியாளுடைய | - 2நாளா.24:7 |
| 6. ஆம் | - மாற்.9:31 |
| 7. கோரேஸ் | - எஸ்.1:7 |
| 8. ஆம் | - லூக்.21:18 |
| 9. நெகேமியா | - நெகே.2:11 |
| 10. அனுப்பப்பட்டவன் | - யோவா.9:7 |

**வேத அறிவுப்போட்டி எண் 219 ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. மெமுகான் | - எஸ்றா.1:21 |
| 2. பேதுரு | - அப்.3:6 |
| 3. எலிகூ | - யோபு 37:24 |
| 4. தயவையும் | - ரோம.11:22 |
| 5. ஆம் | - சங்.65:7 |
| 6. அப்போஸ்தன் பவுல் | - 1கொரி.4:11 |
| 7. அரண், கலக்கம் | - நீதி.10:29 |
| 8. பவுல் | - 2கொரி.3:2 |
| 9. துக்கவீட்டுக்கு | - பிர.7:2 |
| 10. விசுவாசிகளானோம் | - கலா.2:15 |

**வேத அறிவுப்போட்டி எண் 218 ல் வெற்றிபெற்றவர்கள்**


| | |
|---|---|
| 1.T.ராஜாத்தி | - கோம்பை |
| 2.M.இராமச்சந்திரன் | - ஒட்டாநத்தம் |
| 3.K.ராணி | - தூத்துக்குடி |
| 4.J.ஆலிவ் | - கோவை |
| 5.K.ரத்தினாபாய் ராஜபிரசாத் | - மதுரை |
| 6.R.ஜெபகனிரவிச்சந்திரன் | - கூமாபட்டி |
| 7.P.சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 8.Mrs.பாலின் மார்ட்டின் | - காரைக்குடி |
| 9.Mrs.ரூபவல்யா | - நாசரேத் |
| 10.S.ரெஜினா செல்வராஜ் | - வாழையடி |
| 11.Mrs.தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 12.Mrs.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 13.A.டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 14.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 15.Mrs.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 16.J.விக்டர் சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 17.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 18.T.ஏஞ்சலின்நேசமலர் | - கன்னியாகுமரி |
| 19.D.சாந்தாதேவி | - தேனி |
| 20.E.ஜாய்ஸ்ஹெலன்புனிதா | - சென்னை |
| 21.Mrs.தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 22.Mrs.கிறிஸ்டோபல் | - கே.கே.புதூர் |
| 23.M.கௌசல்யா | - திருச்சி |
| 24.Mrs.ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 25.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 26.S.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 27.R.கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 28.Mrs.ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 29.Mrs.மேரிநிர்மலா | - மதுரை |
| 30.Mrs.ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 31.Mrs.பியூலாஜேசுராஜன் | - பாண்டி |
| 32.Mrs.ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 33.Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 34.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 35.Mrs.அன்புகமலம் | - காரைக்குடி |
| 36.E.அதிசயம் | - பனைகுடி |
| 37.Mrs.நவரத்தினம் | - நாசரேத் |

**வேத அறிவுப்போட்டி எண் 219 ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1.Tmt.மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2.T.ராஜாத்தி | - கோம்பை |
| 3.K.ராணி | - தூத்துக்குடி |
| 4.P.சந்திராடேனியல் | - நஞ்சான்குளம் |
| 5.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 6.A.டேவிட்ஜெயசந்திரன் | - மதுரை |
| 7.D.அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 8.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 9.Mrs.வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 10.K.M.சாந்தி | - வாடிப்பட்டி |
| 11.S.மேரிமணிமேகலை | - சென்னை |
| 12.Mrs.கிறிஸ்டோபல் | - கோவை |
| 13.R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 14.S.ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 15.B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 16.E.அதிசயம் | - பனைகுடி |
| 17.Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 18.M.இம்மானுவேல்ராஜ் | - பிலிக்கல்பாளையம் |
| 19.J.S.ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 20.S.ரெஜினாசெல்வராஜ் | - வாழையடி |
| 21.A.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 22.S.பிரமிளாரேவதி | - கோவை |
| 23.Mrs.ஜான்ஸிசந்தியா | - திருநெல்வேலி |
| 24.D.தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 25.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 26.B.பிரிஸ்கில்லா பாபுராஜன் | - மதுரை |
| 27.Mrs.ஃபுளோராஎழில் | - ஆம்பூர் |
| 28.J.இளவரசி | - கோவை |
| 29.J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 30.D.சாந்தாதேவி | - தேனி |
| 31.Mrs.ஜெமிநல்லையா | - கோவை |
| 32.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 33.Mrs.ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 34.S.லதா | - தேனி |
| 35.B.ஞானதீபம்அருள்ராஜ் | - திருநெல்வேலி |
| 36.Mrs.பாலின்மார்டின் | - காரைக்குடி |
| 37.J.ஆலிவ் | - கோவை |

# இன்றே தீர்மானிக்கும் நாள்
## Today Is Decision Time
(1இரா.18:17-39) பாடம் - 31

*-Jerry*




- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

1.கர்மேல் மலைமீது நடந்த மிகப்பெரிய யுத்தமது. பல வருடங்கள் எலியா, ஆகாப் யேசபேல் ஆகியோரின் விக்கிரக வழிபாட்டோடு போராடினார். இந்தக் கதையை முடிப்பதற்கு இது ஒரே தரமாக நடத்தப்படுகிற யுத்தம். யார் மெய்யான தேவன். தேவனா? பாகாலா?

2. ஆகாபின் விக்கிரக வணக்கத்தால் மழையோ பனியோ எலியா சொன்னாலன்றி பெய்யாதென்று எலியா சொன்னார். அவர் தன்னை ஒளித்துக்கொள்ளச் சென்றுவிட்டார்.

3. மூன்று வருடம் ஆறு மாதங்கள் மழையே இல்லை. அதன் முடிவில் எலியா ஆகாபை சந்திக்கிறார்.

4. இஸ்ரவேலில் கலக்கமுண்டாக்குகிறவர் என்று எலியா மீது ஆகாப் குற்றஞ் சுமத்துகிறான். மக்களின் பார்வையில் மெய்யான தேவனென்று தீர்மானிக்கும்படி ஒரேதரமாக ஒரு சோதனை வைக்கலாம் என்று எலியா முன்மொழிகிறார்.

5. ஒவ்வொருவரும் கல்லான பலிபீடத்தைக் கட்டி ஒவ்வொன்றுக்கும் ஒரு காளையையும் தேவையான மரத்தையும் கொடுப்பது எப்படியிருப்பினும் நெருப்பு அங்கே இருக்காது என்பது திட்டம். ஒவ்வொருவரும் தங்கள் தேவனை நோக்கி அக்கினிக்காக வேண்டுதல் செய்வது, நெருப்பை அனுப்பி பலியை எரிக்கிற தேவனே தேவன். இஸ்ரவேல் தொழுதுகொண்டு பின்பற்ற வேண்டிய தேவன். மக்கள் இந்த யோசனையை ஒத்துக்கொண்டார்கள்.

6. பகாலின் பூசாரிகள் முதலாவது வேண்டினார்கள்.

அ) அவர்கள் தங்கள் பலிபீடத்தைக் கட்டினார்கள்.

ஆ) காளையை அவர்கள் கொன்றார்கள்.

இ) பாகாலை நோக்கி அக்கினியனுப்பும்படி வேண்டினார்கள்.

ஈ) ஆனால் அங்கே பதில் ஏதுமில்லை.

உ) மத்தியானம் வரை அவர்கள் பாகாலிடம் கெஞ்சினார்கள். எந்த பதிலும் இல்லை.

ஊ) எலியா அவர்களை கேலி செய்தார்.

1. உங்கள் தேவன் மந்தமாயிருப்பார்.

2. இந்தக் காலையில் அவர் வேலையாயிருப்பார்.

3. ஒருவேளை எங்காவது விடுமுறையில் சென்றிருப்பார்.

4. ஒருவேளை தூங்கியிருப்பான் எழுப்பிவிடுங்கள்.

எ) பாகாலின் கவனத்தைக் கவரும்படி மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். தங்களை வாள் ஈட்டிபோன்றவற்றால் குத்திக் கொண்டார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் அந்திப்பலி செலுத்தும் நேரம் வரை செய்து கொண்டிருந்தார்கள் (மாலை 6.00 மணி) ஆனால் ஒரு பதிலுமில்லை.

7. இப்போது எலியாவின் தருணம்.

அ) எலியா பலிபீடத்தை செப்பனிட்டு அதைச் சுற்றிலும் வாய்க்கால் வெட்டினார்.

ஆ) பலிபீடத்தின்மீது மரத்தையும் காளைகளையும் வைத்தார்.

இ) அந்தப்பலியெல்லாம் நன்கு நனைந்து வாய்க்கால் தண்ணீரால் நிரப்பப்படும் வரை அப்படிச் செய்தான்.

**- தொடரும்**



# புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிறோம்
## Why We Preach The New Birth

*-J.C.Choate*



புதிய பிறப்பு என்றால் என்ன? அது ஒரு நல்ல கேள்வி உண்மையான விஷயமாக அந்த கேள்வி பலமுறைகள் கேட்கப்பட்டு பல்வேறுபட்ட பதில்கள் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக மானோர் இது என்ன என்பதை அறியத் தவறினவர்களாகவே இருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள் ஒரு தனிமனிதன் கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபோது ஒரு அற்புதமான மாற்றம் அந்த மனிதனின் வாழ்வில் ஏற்படுகிறதே புதிய பிறப்பு என விளக்கமளிக்கின்றனர். ஆனால் இதைக்காட்டிலும் மேலான ஒன்று நிச்சயமாகவே நடைபெறுகிறது.

யோவான் 3-ஆம் அதிகாரத்திற்குத் திரும்புகையில் கிறிஸ்து இந்த புதிய பிறப்பைக் குறித்து பேசுகிறதை அல்லது ஒருவன் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதைக் கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பும் உடன்படிக்கையாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பும் இந்தக்காரியம் போதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் கிறிஸ்துவின் உடன்படிக்கை, அல்லது கிறிஸ்தவம் நடைமுறைக்கு வந்திருந்த போது எது அவசியமாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இது போதிக்கப்பட்டது. இது இராஜ்யத்தின் வருகைக்கு முன் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே போதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் இராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டது ஒருவன் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்படிக்கு அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஆனால் நாம் இந்த புதிய பிறப்பினைக் குறித்து இப்போது வாசிப்போம். வேதவாக்கியம், “யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எண்ணப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் அதற்கு நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால்

பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவருமில்லை (யோவா. 3:1-13).

முன்னதாக குறிப்பிட்டவற்றிலிருந்து, தயவு செய்து இதன் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேருள்ள ஒரு மனிதன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் பரிசேயனாகவும் யூதருக்குள்ளே அதிகாரியாகவுமிருந்தபடியினால், இவன் தன்னுடைய சந்திப்பு ரகசியமாகயிருக்கவேண்டுமென அவன் அந்த நேரத்தில் வந்திருப்பான் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் யூதமத பிரிவைச் சேர்ந்தவர்களாகயிருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதர்களும் உண்டென நம்பினார்கள். யூதர்களுடைய அதிகாரியாக இருப்பதென்பது அவன் ஒரு மூப்பனாகவும் மதிப்பிற்குரிய ஒரு பதவியை உடையவனாகவும் இருந்திருக்கின்றான் என்று அர்த்தமாகிறது. எப்படியாகிலும் இயேசுவினிடத்தில் வருகையில் அவன் அவரிடத்தில் விசுவாசமுள்ளவனாக இருந்தவன் எனக் குறிப்பிடுகிறான், அத்தோடுகூட அவன் இயேசுவினிடத்தில் ரபீ அல்லது போதகர் என்றும் மேலும் இயேசு அற்புதங்களைச் செய்ய வல்லமையுடைய வராயிருக்கிறபடியினால், இது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது எனவும் குறிப்பிடுகிறான். அதற்கு இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக்காண, அவன் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கிறது என்ற திட்டத்தினை அங்கு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து என்ன சொல்லிக்கொண்டிருந்தாரென நிக்கொதேமு அறியாதபடியினால் இது அவனை குழப்பமடையச் செய்தது பின்பு அவன், ஒருவன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதை அறிய விரும்பினான். அவன் தொடர்ந்து அந்த மனிதன் தன் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அவன் அவ்வாறு பிறக்கமுடியாது, இயேசுவும் இவ்விதமான அர்த்தத்தில் போதிக்கவும் இல்லை. கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய பிறப்பினைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார் ஆனால்



இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தவில்லையா? தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன் அவருடைய பலத்த கைக்குள் நாம் அடங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். "மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, "…..பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்…" (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? "…தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,… எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:10).

# நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?

## Should You Be Exalted? *-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே இப்புத்தாண்டில் புதுப்பொழிவுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் இவ்வருடத்தை நமக்கு கூட்டிவழங்கியுள்ளார். இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் “மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்” (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் ‘பெருமை’ மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; “அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்.....” (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து “.....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்” (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா?



நிக்கொதேமு ஒரே பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தபடியினால் அவன் சரீரப்பிரகாரமான பிறப்பினைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சியாக இயேசு திரும்பவும் புதிய பிறப்பினைக் குறித்து பெரிய விளக்கத்துடன் தெளிவுப்படுத்தினார். ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் இதைத்தவிர அதில் பிரவேசிப்பதற்கு வேறொரு வழியே கிடையாது என்றும் இன்னும் பல வார்த்தைகளின் மூலம் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் இந்த வார்த்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்ந்து பார்ப்போமாக. முதலாவது அவர் ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று சொன்னதை கவனியுங்கள். பிறக்க வேண்டுமென்பது வரக்கூடிய ஒன்று. ஒரு பிறப்பு என்பது புதியவாழ்வை குறிப்பாகத் தெரிவிக்கிறது. ஆனால் தண்ணீரைப் பற்றிய காரியமென்ன? இயேசு நிக்கொதேமுவுக்கு இரண்டாம் முறை ஒருவன் தன்தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து மறுபடியும் பிறப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது என விளக்கினபடியினால் சரீரப்பிரகாரமான பிறப்பிற்கு தண்ணீர் ஒன்றும் செய்கிறதில்லை. நாம் இந்த “தண்ணீரை குறித்து நினைக்கையில் இன்னொரு விதியையும் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டும் அதாவது மற்ற எல்லா இடங்களிலும் இது எங்கு பயன்படுத்தப்படுகிறது இது ஆவிக்குரிய தண்ணீரென்றால் அது யோசனை செய்ய வேண்டிய ஒன்று, இது ஜீவத்தண்ணீராகச் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இது வெளிப்படையான தண்ணீரில்லை என்பதை குறிக்கும் ஒன்றாகும். இன்னொரு வகையில் பல வசனங்களில் தண்ணீர் என்ற வார்த்தை காணப்படுகிற இடத்தில் இது வெளிப்படையான அல்லது உண்மையான தண்ணீர் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தப்படும் வழி என்ன? தண்ணீர் என்ற வார்த்தை மட்டும் குறிப்பிடப்படுகையில் நாம் அவர் உண்மையான ஜலத்தைப் பற்றி பேசினார் என்ற முடிவுக்கு வரவேண்டும். இப்போது அடுத்த கேள்விக்குச் செல்வோம். தண்ணீரோடு சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேதவாக்கியத்தில் நாம் என்ன செய்ய கட்டளையிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை நன்கு அறிந்தவர்களாக இருப்பீர்களென்றால் நீங்கள் அங்கே ஒரே ஒரு கட்டளை அல்லது செயல், அதாவது தண்ணீரோடு சம்பந்தமுள்ளதும் அது ஞானஸ்நானமே என்பதையும் அறிந்துகொள்வீர்கள் அப்போஸ்தலர் 8:26-39-ல் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதன் கிறிஸ்துவைப்பற்றி போதிக்கப்பட்டவனாகி அதன்பின் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனாக இருந்தான் என நாம் வாசிக்கிறோம். இத்தோடுகூட ஒருவன் தண்ணீர் முழுக்கினால் கண்டிப்பாகப் பிறக்க வேண்டுமென கிறிஸ்து சொன்னார். ஒருவன் தண்ணீர் முழுக்கினால் எவ்வாறு பிறக்கமுடியும்? நல்லது இங்கே ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் குறிப்பிடப்பட்டிருக்குமானால் தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோ 2:12), மேலும் தண்ணீரில் அடக்கம் என்றால் பிறகு ஒருவன்

அந்த தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது வெளித்தோன்றுதல் அல்லது ஒரு பிறப்பின் அனுபவம் என்று அர்த்தமாகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுல் ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது என இங்கே விளக்குகிறார். (ரோம. 6:3,4).

ஜலத்தினால் பிறந்திருத்தல் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுதலைப் பற்றி தொடர்ந்து நாம் சிந்திக்கையில், ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் அவன் வெளித்தோன்றியிருக்கிறான் அல்லது ஒரு வாழ்வை பெற்றிருக்கிறான் என நாம் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் அப். பவுல் ரோமர் 6:3 மற்றும் கலா. 3:26,27-ல் ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது, மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லுகிறபடியினால் இது தண்ணீரோடு இணைக்கப்பட்டுள்ளது. பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17) என்றான். கிறிஸ்தவர்களிடம் பேதுரு சொன்னபோது, "நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேது 2:3) என்றான்.

இரண்டாவதாக கிறிஸ்து ஒருவன் ஆவியினால் பிறந்திருக்க வேண்டும் என்று சொன்னார் இங்கே அந்த ஆவியானவர் யார்? பவுல் எபேசியர் 4:4 ல் ஒரே ஆவியும் உண்டு என்றான் மேலும் அந்த ஆவி எப்படியிருக்கும்? அவர் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவி (யோவா 14:26; அப் 1:8; அப் 2:38; 1தெச.4:8) ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்னவாயிருந்தது? ஒன்று அவர் அப்போஸ்தலர்களை வழிநடத்தினார். மேலும் மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். அதற்கு முன்பாக அவர் தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு முற்காலத்து பரிசுத்தமனுஷர்களை வழிநடத்தினார். (2பேது 1:21) வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று பவுல் எழுதினான் (2தீமோ. 3:16,17) ஆனால் அந்த ஆவியின் வார்த்தையில் அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சத்தியம் (யோவா 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16), அல்லது ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் (அப். 2:37,38). ஒருவன் ஆவியானவரின் வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படியமாட்டானா? பேதுரு தன்னுடைய நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "...நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய்



தலையாயிருக்கிறார். புருஷனுக்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறான். புருஷன் ஸ்திரீக்காக உண்டாகப்பட்டவனல்ல, புருஷனானவன் தேவசாயலும் மகிமையுமாயிருக்கிறான். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷனிலிருந்து தோன்றின வளாயுமிருக்கிறாள்.

● இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும் ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீன மாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.

● ஸ்திரீயினது தலைமயிர் அவளுக்கு துணியாலான முக்காட்டிற்குப் பதிலாக (முக்காடாக) கொடுக்கப்பட்டிருக்றது.

❒ திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் ஜனவரி 1–ம் தேிமுதல் அனைத்து வகையான பாலித்தீன் பைகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களுக்கும் தடைவிதித்து கலெக்டர் டி.ஜி.வினய் உத்தரவிட்டுள்ளார்.

❒ மும்பையில் உள்ள முகமது அலிஜின்னா வீடு பாகிஸ்தானுக்கு சொந்தமானது என்று பாகிஸ்தான் கூறியதற்கு, இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.

❒ கோவா மாநிலத்தில் பிரிட்டன் நாட்டு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து அவரிடம் இருந்த லக்கேஜ்களை திருடிச் சென்ற நபரை போலீசார் கைது செய்தனர்.

❒ சென்னையில், இந்தியன் ஆயில் நிறுவனம் வாகனத்தில் டீசல் விற்பனை செய்யும் திட்டத்தை துவக்கியுள்ளது.

**நடப்புச்செய்திகள்**

## பொது அறிவு சோதனை

1.ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என அழைக்கப்படுவது?
(ஆ)பிரான்ஸ் (ஆ) சுவிட்சர்லாந்து (இ) ஸ்பெயின்

2. சட்டீஸ்கர் மாநிலத்தின் தலைநகரம் எது?
(அ) ராய்ப்பூர் (ஆ) டேராடூன் (இ) பானாஜி

3. விண்வெளியில் அதிக காலம் உள்ள விண்வெளிக்கலம் எது?
(அ) மிர் (ஆ) மாரினார்( இ) சோயுஸ்

4. 2005 உலகின் என்ன ஆண்டாக அறிவிக்கப்பட்டது?
(அ) முயோர் ஆண்டு (ஆ) இயற்பியல் ஆண்டு (இ) எழுத்தறிவு ஆண்டு

5. உலக அமைதிக்கான நோபல் பரிசை வழங்கும் நாடு எது?
(அ) நார்வே (ஆ) கனடா (இ) நியூசிலாந்து (**விடைகள்: 1. ஆ 2. அ 3. அ 4. ஆ 5. அ**)

## நன்றி சொல்வோம் நம் தேவனுக்கு!

✞ வருடம் முழுவதும் எங்களை பாதுகாத்தவரே உமக்கு நன்றி!
✞எங்கள் ஆத்துமாவுக்கு மேய்ப்பராயிருந்தவரே உமக்கு நன்றி!
✞எங்கள் விண்ணப்பங்களுக்கு, செவி சாய்த்தவரே உமக்கு நன்றி!
✞இயேசுவை எங்களுக்காக அனுப்பினவரே உமக்கு நன்றி!
✞வருடத்தை நன்மையால் முடி சூட்டுபவரே உமக்கு நன்றி!

-K.S.மாணிக்கவாசகம், திருச்சி

இந்த பகுதியின் நோக்கம்: புருஷர்கள் ஒரு ஸ்திரீயினுடைய தோற்றத்தை உடையவர்களாய் ஆராதனையில் தமக்கு முன் வந்து தம்மை கனவீனப்படுத்துவதை தேவன் விரும்பவில்லை. ஒரு கிறிஸ்தவ பெண்ணும் நாகரீகமென்று புருஷனைப்போல தன் தலைமயிரை குட்டையாகக் கத்தரித்துப்போட்டு முக்காடிட்டுக் கொள்ளாமல் தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்பவில்லை என்பதை விளக்குவதாகும்.

வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள இந்தக் குறிப்பிட்ட “முக்காடிட்டுக்கொள்ளுதல்” என்ற வினாவானது கலாச்சார வழக்க மாற்றத்திற்கேற்ப மாற்றப்படுதற்கில்லை. இது அதிகாரமுடைய தேவனுடைய கட்டளையைச் சார்ந்ததாயும், மேலும் ஸ்திரீ - புருஷன் இவர்களது நடைமுறையும் தோற்றமும், ஆதாம் ஏவாளுடைய காலத்திற்கு அழைத்துச் செல்லுகிறதாகவுமிருக்கிறது.

ஆனால் இங்கே முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய கேள்வி, தன்னுடைய கலாச்சார காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் பாவமில்லாததாகவுமிருக்கிறது.

தங்களுடைய திருமணத்திற்கு முன் ஈசாக், ரெபெக்காளைக் காண்பதற்கு வயல்வெளியிலே வருகிறதை ரெபெக்காள் கண்டபோது, “அவள் முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள்” என ஆதியாகமம் 24:65 கூறுகிறது. திருமணமாகாத பெண்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொள்வது அந்த இடத்தின் கலாச்சார வழக்கம் என தெளிவுபடுத்துகிறது.

இருந்த போதிலும், தாமார் யூதாவை வேசிதனத்துக்கு உட்படுத்த, “...... அவள் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு (முக்காட்டுத் துணி என தெளிவாக வெளிப்படுத்தபடவில்லை) முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு.......” என ஆதி. 38:14ல் நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தின் கலாச்சார வழக்கத்தில் முக்காடு வேசிக்கு அடையாளமாக மாறியிருந்தது.

“...... அவள் அழகுள்ளவளானபடியால்” (ஆதி. 12:14, 26:7) சாராளும், ரெபெக்காளும் எகிப்து, பெலிஸ்திய ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். என வாசிக்கிறோம். அந்நாட்களில் அவ்விடத்து வழக்கம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தவில்லை என்பதை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

இன்று பெண்கள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஒழுக்கமற்ற செயல் அல்லது கணவனுக்கு அவமதிப்பை கொண்டுவரும் செயல் என கலாச்சார வழக்கத்தில் கருதப்பட்டால் கலாச்சார வழக்கத்தைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக கலாச்சாரத்தை மதிப்பது ஞானமுள்ளதாக இருக்கும் அல்லது தன் கணவனுக்கு கீழ்ப்படியும் மனைவி என்பதைக் காண்பிக்க வேறு ஏதாவது ‘அடையாளம்’ சமுதாய வழக்கத்தில் இருக்குமானால் அந்த வழக்கத்தை பின்பற்றுவது சிறந்ததாக இருக்கும் அப்படியானால் அவள் “........விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.” (1 தீமோ 5:14)

இப்பகுதியின் முடிவுரையில் இதுவரையில் பார்த்த எல்லாக் கருத்துக்களையும் மறுபடியும் காண்போம்.

- இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன்



அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேது 1:22 - 25). ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து யோவான் 3:5ல் சொன்னதை கவனியுங்கள் ஆனால் 1 பேதுரு 1:23ல் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிபிக்கப்பட்டீர்கள் என தேவஆவியினால் ஏவப்பட்ட மனிதன் கூறினான். ஆனால் யார் அந்த வார்த்தையைக் கொடுத்தது? ஆவியானவர். ஆனபடியினால் ஆவியினால் பிறப்பதும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதும் ஒன்றே. ஆனால் விசுவாசம் எப்படிவருகிறது? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோம. 10:17). பின்பு ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படிவான், அவன் அதற்குக் கீழ்ப்படிந்தால் அவன் ஞானஸ்நானம் பெறுவான் அல்லது தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு, இவ்விதமாக அவன் இரட்சிக்கப்படுவான் (கொலோ 2:12; மாற். 16:16) அதுவே பேதுரு 1பேது 1:23ல் கூறியவை; அதாவது நாம் பரிசுத்த ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஒருவனை வழிநடத்துவது என்பதாகும்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்பது ஒருவன் தேவனுடைய வார்த்தையின் போதனைக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவில் விசுவாசம்வைத்து, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு. தன்பாவங்கள் மன்னிக்கப்படும்பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, அதன்பின் கர்த்தர் அந்த மனிதனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை வாசியுங்கள் உண்மையாகவே அன்று எருசலேமிலிருந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் இவ்வளவு நேரமாக பயன்படுத்தப்பட்ட சிறிதும் தவறில்லாத அந்த வார்த்தைகளைத் தவிர மறுபடியும் பிறப்பதைக் குறித்துச் சொல்ல வேறொன்றும் கிடையாது, ஆனால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தபோது அது அவனை தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறது என்று கிறிஸ்து சொன்னதினால் அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் எனவும் மேலும் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கின்ற ஜனங்கள் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக்கொண்டார் என நாம் அறிகிறோம். ஆனால் ராஜ்யம் மற்றும் சபையைக் குறித்த காரியம் என்ன அவைகள் வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லையா? இல்லை, தேவவாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள படி ஒரே ஸ்தாபனம் அல்லது அமைப்பாக ராஜ்யம் மற்றும் சபை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறபடியினால் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லை. கொலோசெயர்1:14ல் உதாரணமாக கொலோசெய சபைக்கு பவுல் எழுதுகின்றான் இன்னும் அவன், “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். "குமாரனாகிய அவருக்குள்,

அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:13,14) என்கிறான். அப்போஸ்தலர் 2-ல் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களெனவும் ஆனால் அப்போஸ்தலர் 8-ல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் என அவ்வசனம் கூறுகிறது. (அப் 8:12) அப்.2-ல் குறிப்பிடப்பட்ட ஜனங்கள் சபை அங்கத்தினர்களாகவும் சமாரியர்கள் ராஜ்யத்தின் அங்கத்தினர்களாகவும் மாறி இவ்விதமாக இரு வேறுபட்ட அமைப்புகளாக இருந்தது என்று அர்த்தமாகிறதா? இல்லை அவைகள் இரண்டும் ஒரே அமைப்பாகவும் ஸ்தாபனமாகவும் இருக்கிறது.

ஆனபடியினால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறபோது அவன் கர்த்தருடைய வார்த்தையை கேள்விப்படுகிறான் அவன் அதை விசுவாசிக்கிறான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறான். கிறிஸ்துவில் கொண்டுள்ள தன்னுடைய நம்பிக்கையை அறிக்கையிட்டு, இவ்வாறாக அவன் இரட்சிக்கப்பட்டு அதன்பின் கர்த்தர் அவனை தம்முடைய சபையில் சேர்க்கிறார், அதாவது அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய குடும்ப அங்கத்தினனாக, ஒரு புதிய சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக, அவன் வளர்ந்து, பெருகி, விசுவாசத்தில் பலங்கொண்டு ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக இருப்பான். நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நித்தியஜீவனைக்குறித்த நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால், இதை நாம் செய்யவேண்டும். இதை நாம் ஒவ்வொருவருக்கும், மேலும் உலக முழுவதுக்கும் பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால், இதைச்செய்யும்வரை, நீங்கள் இழந்தவராகவும் இன்னும் இழந்து போகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ்வுலகத்திலும், வரப்போகிற உலகத்திலும் நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு மறுபடியும் பிறப்பதற்கு வேறு வழியே இல்லை. நீங்கள் இந்த காரியங்களை அறிந்து கொள்ளும் வரைக்கும் மேலும் நீங்கள் அவர் கற்பித்திருக்கிறபடி செய்யும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

- புது வருடத்தில் புதிய மனுஷனாய் வாழ...
- புது தீர்மானங்கள் புதிய காரியங்களைச் செய்ய...
- புது நம்பிக்கை புதிய உலகத்திற்குச் செல்ல...
- புது ஆரம்பம் புதிய உற்சாகத்தைக் கொடுக்க...
- புது வஸ்திரம் புதிய உணர்வைப் பெற...
- புது சிந்தனை புதியவைகளைச் செய்ய...
- புது பார்வை புதிய இடங்களைத் தேர்வுசெய்ய...

**யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் – 2019**






## ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

Is A Woman Required To Cover Her Head While Praying? -Betty



ஸ்திரீயானவள் கண்டிப்பாக ஒரு துணியினால் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்ற போதனையைத் தெரியப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் சித்தம் கொண்டிருப்பாரென்றால் ஏன் மற்ற வசனங்களிலும் மிக திட்டமான வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. பதிலாக அவர் முக்காடிடுதல் என்ற பதத்தை மாத்திரமே பயன்படுத்தினார் மேலும் ஸ்திரீயினது தலைமையிரே முக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது என தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர் அவளது தலைமயிரானது ஒரு முக்காட்டுத் துணியல்ல அவளுக்கு மகிமையாக இருக்கிறது என விளக்கமளிக்கிறார்.

இதற்கு மாறாக புருஷனுடைய தலை மூடிக்கொள்ளப்பட வேண்டியதில்லை. எல்டர்டு எக்லோஸ் இதுபற்றி "அவன் தலை மூடப்பட்டிருத்தல்" என்பது ஒரு வியாக்கியானமே தவிர இது ஒரு மொழிபெயர்ப்பல்ல என எழுதினார். "அவனது தலையிலிருந்து ஏதோ தொங்கி கொண்டிருத்தல்" என லென்ஸ்கி மொழிபெயர்த்துள்ளது சரியானதாக உள்ளது.

1. கொரிந்தியரைக் குறித்த இவரது வியாக்கியானத்தில் பெட்டன் கோஃப்மேன் கூறுகிறார், விவாதத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய இந்த கருத்து பின்பு அப்போஸ்தலரால் "புருஷன் தலைமயிரை நீளமாக வளர்க்கிறது. அவனுக்குக் கனவீனமாயிருக்கிறது" (வச.14) என தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது போல தலையிலிருந்து வேண்டிய அளவு நீளமாகத் தொங்கி கொண்டிருத்தல் என்பது "நீளமான தலைமயிர்" என்ற பதத்திற்கு ஒப்பிடப்படும்.

2-ம் நூற்றாண்டில் இதுபற்றி கிளமெண்ட் அலெக்சாண்டர் தன்னுடைய கூற்றில் புருஷனுடைய தலைமயிர் நீளமாயிருப்பதைக் குறித்து இவ்விதமாக எழுதுகிறார்; தலைமயிரானது நீளமாக கீழே தொங்கி கண்களை மறைப்பதைபோல வளர்வதில்லை....... கத்தரிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.... ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்வது போல தலையிலிருந்து பின்னப்பட்டு தொங்கவிடப்படலாகாது". (Ante Nicene Fathers, Wm B.Eerdmans Publishing Co., லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது)

நிச்சயமாக ஸ்திரீயானவளைக் காட்டிலும் புருஷனானவன் தன் தலைமயிரை குட்டையாக அடையாளப்படுத்தி கொண்டிருப்பது உண்மையென சுபாவமே தெளிவுபடுத்துகிறது போல வரலாறு முழுவதும் உலகமுழுவதும் இது பொதுவான உண்மையாகக் கருதப்படுகிறது. இது புருஷன் சிறிதளவுகூட தலைமயிரை வைத்துக்கொள்ளக்கூடாது என பொருள்படுவதில்லை. "நீளம்" என்பது சென்டிமீட்டர் அல்லது இஞ்சில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது நமது உடலின் ஒரு பாகமாயிருக்கிறபடியால் சரீரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்க தலைமயிரை ஸ்திரீயானவள் நீளமாக வளர்ப்பது உதவியாகயிருக்கிறது.